[2003 ஜனவரி 31

(ஐ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மின்னழுத்தக் குறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. சி. இராசேந்திரன், திருமதி பூபதி மாரியப்பன் மற்றும் திரு. ப. அரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராசேந்திரன்.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தொடர்ந்து மின்னழுத்தக் குறைவு ஏற்படுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 11 கே.வி. மின் பாதைகளில் உள்ள கம்பிகளை அதிகத் திறன் கொண்ட மின் கம்பிகளாக மாற்றும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. எனவே, தற்பொழுது மின் விநியோகம் மேம்பாடு அடைந்து குடிநீர் விநியோகம் பாதிக்கப்படாத வகையில் மின் விநியோகம் பராமரிக்கப்படுகிறது.

மேலும், திருச்சிற்றம்பலம் என்னும் இடத்தில் புதியதாக 33/11 கே.வி. புதிய துணை மின் நிலையம் ரூ.110 இலட்சம் செலவில் நிறுவுவதற்கு பணிகள் தொடங்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதனை வரும் 31—3—2003—க்குள் இயக்கி வைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் பேராவூரணியில் உள்ள 66/11 கே.வி. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த ரூ.629.44 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு, 10—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு வரும் 2003—2004 ஆம் ஆண்டில் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்கூறிய வேலைகள் முடிக்கப்பட்டதும் பேராவூரணி பகுதியில் மின் அழுத்தம் மற்றும் விநியோகம் மேலும் மேம்பாடு அடையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஜனவரி 31]

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் முழுக்க முழுக்க இப்போது விவசாயத்திற்குத் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் ஆழ்குழாய் மூலமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி, தண்ணீர் பெறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்த ஆண்டே இங்கிருக்கின்ற அனைத்துத் துணை மின் நிலையங்களையும் தரம் உயர்த்தவும், புதிதாகத் துணை மின் நிலையங்கள்—தொடங்கப்பட வேண்டியவற்றை—தொடங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது எடுத்து நிறைவேற்றுமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் அனைத்துத் துணை மின் நிலையங்களையும், அதாவது 33/11 கே.வி. துணை மின் நிலையங்களை 63/13 கே.வி. ஆக உயர்த்துவது இந்த ஆண்டிலேயே செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராசேந்திரன்.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசானது இந்த ஆண்டில் நிறைவேற்றித் தருவோம் என்று அறிவித்ததற்கு மாவட்டத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, கல்லணை கால்வாய்ப் பாசனப் பகுதியிலே சேர்ந்த பகுதியாகும். இந்த ஆண்டு கல்லணை கால்வாயிலே நிரந்தரமாகத் தொடர்ந்து தண்ணீர் தரவில்லை என்பதை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஆழ்குழாய் கிணறுகளிலேயிருந்து விவசாயம் செய்கின்ற நிலைமை அந்தப் பகுதியில் இருக்கிறது. நெல் பயிர் மட்டுமல்ல, கரும்பையும் விவசாயம் செய்கிறார்கள். கரும்புக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் தரவில்லை என்று சொன்னால், கரும்பினுடைய பிழி திறன்கூட குறைந்து கரும்புக்குக் கிடைக்கிற விலை குறைந்து போகிறது. அது மட்டுமல்ல,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[திரு. ப. அரசன்] [2003 ஜனவரி 31

ஒரு விவசாயினுடைய ஆழ்குழாய்க் கிணற்றிலேயிருந்து, அது சட்டப்படி தவறு என்று சொன்னாலும், மனிதாபிமான அடிப்படையிலே பக்கத்திலே இருக்கிற விவசாயி அந்தத் தண்ணீரைப் பெற்று விவசாயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்து, அதுமட்டுமல்லாமல் ஆழ்குழாய்க் கிணறுகளுக்குக் குறிப்பிட்ட நேரத்திலே மின்சாரம் தரப்படும் என்கின்ற உத்தரவாதத்தைத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்தில் எங்கெல்லாம் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறதோ அதெல்லாம் கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் கூறிய பகுதியில் மின் அழுத்தக் குறைவு இருந்தால் உடனடியாக அது சரி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

(ஒ) நீலகிரி மாவட்டம், மரங்களை வெட்டத் தடையால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு, திரு. சி. சிவசாமி, திரு. ஏ.கே. செல்வராஜ் மற்றும் திரு. எம்.ஏ. ஹக்கிம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் மக்களின் பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சில்வர் ஓக் போன்ற மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.